

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 344 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 09 – சனிக்கிழமை 25 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 344 : Thiruvalluvar Year - 2057 - Aadi 09 - Saturday 25 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## காவிரி நீரைப் பெறவும், மேகதாது அணைக்கு எதிரான தீர்மானத்தை பிரதமரிடம் நேரில் வழங்கிடவும் முதலமைச்சருக்கு ஏன் இந்த பயம்?

# த.வெ.க. அரசின் அர்த்தமற்ற மவுனம் அதிர்ச்சியளிக்கிறது!

## ‘விவசாயிகளுக்கு புதிய நிவாரணத் தொகுப்பை அறிவித்திடுக’ – எனவும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, ஜூலை 25-**

**காவிரி நீரைப் பெறவும் - மேகதாது அணைக்கு எதிரான தீர்மானத்தைப் பிரதமரிடம் நேரில் கொடுக்கவும் ஏன் பயம்? எனவும், அர்த்தமற்ற மவுனத்தைக் கலைத்து மாநில உரிமையை நிலைநாட்ட போர்க்கால நடவடிக்கையில் ஈடுபடுக! என்றும் குறுவை பாதிப்பு மற்றும் சம்பா சாகுபடி ஏமாற்றத்தில் தவிக்கும் விவசாயிகளுக்கு “புதிய நிவாரணத் தொகுப்பினை” அறிவித்திடுக!! எனவும் த.வெ.க. அரசுக்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல் வருமாறு:-**

குறுவையும் பாதித்து - சம்பா சாகுபடியும் கேள்விக்குறியாகும் பேராபத்தில் உள்ளனர் காவிரி டெல்டா விவசாயிகள். உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு உரிய காவிரி நீரைத் திறந்து விட கர்நாடகாவில் உள்ள காங்கிரஸ் அரசு தொடர்ந்து மறுத்து வருவது, காவிரி டெல்டா விவசாயிகளைப் பேரிடரில் தள்ளியிருக்கிறது. தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய 28.3 டி.எம்.சி காவிரி நீரில் இதுவரை 3.4 டி.எம்.சி மட்டுமே திறந்து விட்டுள்ளதால் மேட்டூர் அணையை ஜூன் 12-ஆம் தேதியும் திறக்க இயலவில்லை.



ஜூன் 23 அன்று நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், “அணைகளில் உள்ள நீரைக் குடிநீர்த் தேவைக்கு மட்டுமே பயன்படுத்துங்கள்” என்று ஆணையம் அறிவுறுத்தி, தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் திறப்பது குறித்த முடிவை ஜூலை 22-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது. இப்போது ஜூலை 22-ஆம் தேதி நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்திலும், “குடிநீர்த் தேவைக்கு மட்டுமே நீரைப் பயன்படுத்துங்கள்” என அறிவுறுத்தி, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறப்பது பற்றிய முடிவினை ஜூலை 28-ஆம் தேதிக்குத் தள்ளி வைத்துள்ளது.

இரு கூட்டங்களிலும் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையைக் காவிரி மேலாண்மை ஆணையம் மீண்டும் மீண்டும் நிராகரித்து - காலதாமதம் செய்து கொண்டிருக்கிறது. ஒரு கூட்டம், இரு கூட்டம் என்று இப்போது மீண்டும் 28.7.2026 அன்று மூன்றாவது கூட்டம் என்ற நிலையிலேயே காவிரி மேலாண்மை ஆணையம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் கோரிக்கையில் உள்ள அவசர நியாயத்தை ஆணையம் உணர மறுப்பது தெளிவாகிறது. “இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறக்கும் பொறுப்பை” காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றிடம் உச்சநீதிமன்றம் ஒப்படைத்து இருந்தாலும், அந்தப் பொறுப்பினைத் தட்டிக் கழித்து, காலதாமதம் செய்து கொண்டிருக்கிறது காவிரி மேலாண்மை ஆணையம். “தமிழ்நாட்டிற்கு உரிய காவிரி நீரைக் கர்நாடகம் தர மறுப்பது நீதிமன்ற அவமதிப்பு” என உச்சநீதிமன்றம் 23.11.2025 தீர்ப்பிலேயே தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ள நிலையில், காவிரி மேலாண்மை ஆணையம் காலதாமதம் செய்து கொண்டிருப்பது காவிரி டெல்டா விவசாயிகளின் வேதனைக் கண்ணீருக்குத் தீர்வாகாது.

நெருக்கடியான இச்சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்நேரம் பிரதமர் அவர்களைச் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் முதலமைச்சரும் பேசவில்லை. நீர்வளத்துறை அமைச்சரும் பேசவில்லை. தலைமைச் செயலாளரும் கர்நாடக மாநிலத் தலைமைச் செயலாளருக்கோ அல்லது ஒன்றிய அரசின் செயலாளருக்கோ கடிதம் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. ஒட்டுமொத்த காவிரி டெல்டாவின் உயிர் நாடிப் பிரச்சினையில் இந்த அரசு காக்கும் அர்த்தமற்ற மவுனம் அதிர்ச்சியளிக்கிறது.

### விவசாயிகளை ஏமாற்றிய இந்த அரசு!

ஏற்கெனவே முழுக் கடன் தள்ளுபடி செய்யாமல் விவசாயிகளை ஏமாற்றி விட்டது இந்த அரசு. மேகதாது அணை கட்டுவதை எதிர்க்கவும் நடுவர் மன்றமும் அமைக்க சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியும், அந்தத் தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக் கொண்டு பிரதமரிடம் நேரில் கொடுக்கவும் நேரமில்லாமல் இருக்கிறார் முதலமைச்சர். இப்போது தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் தர மறுக்கும் கர்நாடக அரசையும் தட்டிக் கேட்க முடியாமல் தவிக்கிறார். விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையை விட வேறு என்ன பிரச்சினையில் இந்த அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது? மாநிலத்தின் காவிரி உரிமையை நிலைநாட்ட ஏன் இவ்வளவு பயம்?

முதலமைச்சர் உடனடியாகத் தனது மவுனத்தைக் கலைத்து, கர்நாடகாவிலிருந்து காவிரி நீரைப் பெறப் போர்க்கால நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். எல்லா அதிகாரமும் பெற்ற காவிரி மேலாண்மை ஆணையத்தைத் தட்டி எழுப்ப உச்சநீதிமன்றத்தை உடனடியாக அணுகி, தமிழ்நாட்டிற்கு உரிய காவிரி நீரைப் பெறுவதற்கு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### காவிரி நீரைப்பெற தீவிர நடவடிக்கை எடுத்திடுக!

குறுவை சாகுபடி பாதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் காவிரி டெல்டா விவசாயிகள், சம்பா சாகுபடியும் கானல் நீராகுமோ எனக் கவலையில் உறைந்து போயிருக்கிறார்கள். காவிரி நீரைப் பெறத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளும் அதே வேளையில், விவசாயிகளுக்கு உடனடியாக “புதிய நிவாரணத் தொகுப்பினை”யும் அறிவித்து,

> **“மேகதாது அணை கட்டுவதை எதிர்க்கவும் நடுவர் மன்றமும் அமைக்க சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியும், அந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக் கொண்டு பிரதமரிடம் நேரில் கொடுக்கவும் நேரமில்லாமல் இருக்கிறார் முதலமைச்சர். இப்போது தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் தர மறுக்கும் கர்நாடக அரசையும் தட்டிக் கேட்க முடியாமல் தவிக்கிறார்.”**

விவசாயப் பெருங்குடி மக்களை இப்பேரிடரிலிருந்து காப்பாற்றிட முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

---

### பல்லாயிரக்கணக்கில் மாணவர்கள் திரண்டனர்!

# புதுடெல்லியில் ‘நீட்’ தேர்வுக்கு எதிரான போராட்டம் தீவிரம்!

## இணையதள சேவை முடக்கம் - மோடி அரசுக்கு எதிராக கண்டன முழக்கம்!

**புதுடெல்லி, ஜூலை 25-**

**டெல்லியில் நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம் வலுத்து வருவதால் அடுத்த இரண்டு தினங்களுக்கு, நகர் முழுவதும் இணைய தள சேவையை முடக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.**

நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளில் நடைபெற்ற வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூன் 21ஆம் தேதி முதல் டெல்லி ஜந்தர் மந்தரில் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். ஏராளமான இளைஞர்கள் மோடி அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி வருகின்றனர்.

நேற்று 35வது நாளாக நீடிக்கும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஜந்தர் மந்தரில், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் குவிந்து வருகின்றனர். இன்றும் நாளையும் விடுமுறை தினம் என்பதால் போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்பார்கள் என்பதால் டெல்லி நகரம் முழுவதும் இணையதளச் சேவை முடக்கப்பட்டுள்ளது. போராட்டம் நடைபெறும் பகுதிகளில் ஏராளமான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளதால் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

### மாணவர் போராட்டத்தை தடுக்கும் த.வெ.க. அரசு!

இதனிடையே, மாணவர்களின் போராட்டத்திற்கு அஞ்சி, மெரினாவை 2வது நாளாக த.வெ.க. அரசு மூடிவைத்துள்ளது. மெரினாவில் மாணவர்கள் போராட்டம் நடத்த வாய்ப்புள்ளதால், அதனை தடுக்கும் நோக்கில், த.வெ.க. அரசு காவல்துறையை குவித்து வைத்துள்ளது. கடற்கரைக்கு வருபவர்கள் தீவிர சோதனைக்கு பிறகே காவல் துறையினர் அனுமதித்து வருகின்றனர்.

மேலும், சென்னை, மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நீட்டுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். மாணவர்களின் போராட்டத்தை த.வெ.க. அரசின் காவல்துறை தடுத்து வருகிறது.

---

### நீட், மேகதாது பிரச்சினை - நாடாளுமன்றத்தில் நேற்றும் குரல் எழுப்பிய தி.மு.க.!

# கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மீதான தாக்குதலுக்கும் கண்டனம்!

## தொடர் அமளியால் நாடாளுமன்றம் 5-வது நாளாக முடங்கியது!

*புதுடெல்லி, ஜூலை 25-*

*நீட், மேகதாது விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளால் நாடாளுமன்ற இரு அவைகளும் 5வது நாளாக நேற்றும் முடங்கின. மக்களவை நாள்முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.*

*மக்களவை நேற்று காலை கூடியதும், நீட் மற்றும் மேகதாது பிரச்சினை குறித்து அளிக்கப்பட்ட நோட்டீஸ் மீது அவையை ஒத்திவைத்து, விவாதம் நடத்த வலியுறுத்தி தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அவையின் மையப்பகுதிக்கு சென்று முழக்கங்களை எழுப்பினர்.*

*இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை தொடங்கிய ஒரு நிமிடத்துக்குள்ளாகவே நண்பகல் 12மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால், மக்களவை நாள்முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.*

*இதேபோல், மாநிலங்களவையிலும் நீட், மேகதாது பிரச்சினை மற்றும் மாணவர்கள் மீதான தாக்குதல் விவகாரங்கள் எதிரொலித்தன. இவ்விவகாரங்கள் குறித்த விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். இதனை ஏற்க அவைத் தலைவர் மறுத்ததைக் கண்டித்து அவையில் முழக்கம் எழுப்பப்பட்டது.*

*இதனைத் தொடர்ந்து மாநிலங்களவையும் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால் மாநிலங்களவை இரண்டுமணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.*

---

### சூரியசக்தி, காற்றாலை மின் திட்ட விண்ணப்பங்கள் நிறுத்தம்

# த.வெ.க. ஆட்சியின் அலட்சியத்தால் முதலீட்டாளர்கள் அதிருப்தி!

## வேறு மாநிலங்களுக்கு முதலீட்டாளர்கள் மாறும் அவலம்!

*சென்னை, ஜூலை 25-*

*சூரியசக்தி மற்றும் காற்றாலை உள்ளிட்ட மின் திட்டங்களுக்கான புதிய விண்ணப்பங்கள் பெறுவதை, த.வெ.க. அரசு நிறுத்தியதால், முதலீட்டாளர்கள் மற்ற மாநிலங்களுக்கு செல்லும் நிலை உருவாகியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.*

*த.வெ.க. அரசு புதிய தொழில் முதலீட்டாளர்களுக்குத் தேவையான கொள்கை நிலைத்தன்மையை வழங்கத் தவறியதால், தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய பல கோடிக் கணக்கான தொழில் திட்டங்கள், அண்டை மாநிலங்களுக்குச் சென்று விட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன. இந்த நிலையில், சூரிய சக்தி, காற்றாலை மின்சக்தியை உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்களுக்கு விண்ணப்பம் பெறுவது இரு மாதங்களாக த.வெ.க. அரசு நிறுத்தியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. மேலும், ‘ஆன்லைன்’ வாயிலாக விண்ணப்பம் பெறும் சேவையை தொடங்கவும் மின் வாரியம் தாமதம் செய்வதாகவும் கூறப்படுகிறது. இந்த தாமதம் காரணமாக, அதிருப்தி அடைந்துள்ள முதலீட்டாளர்கள், குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

